ஜூன் 28, 2023

# காதல் காற்றில் தவழ்ந்து வருகிறது! பிராம்ப்டன் உழவர் சந்தையில் திருமணம் புரிந்து கொள்ளுங்கள்!

இந்த வருட கோடைப்பருவத்தில் மூன்று சனிக்கிழமைகளில் மட்டுமே குடிமக்களுக்கான திருமண வைபவங்களை பிராம்ப்டன் நகர நிர்வாகம் நடத்திக்கொடுக்க முன்வருகிறது! மறுபடியும் ஒரு பரவலான வரவேற்பின் பேரில், உழவர் சந்தை நடைபெறும்போது $350 (கூடுதலாக HST) கட்டணமாக செலுத்தி, டவுண்டவுன் பிராம்ப்டனில் உள்ள அழகிய கேஜ் பார்க் கஜீபோ (Gage Park gazebo) -இல், வைத்து நகர அலுவலரால் சங்கல்பம் செய்துவைக்கப்பட்டு இந்த திருமணங்கள் நிகழ்த்தப்பெறுகின்றன; இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு திருமணம் புரிந்துகொள்ளுங்கள்

குறைந்த எண்ணிக்கையிலான கால இடைவெளிகளே உள்ளன:

- சனிக்கிழமை, ஜூலை 15 தேதிக்கான ஒரு கால இடைவெளிக்காக நேரில் வந்து முன்பதிவு செய்துகொள்ள கடைசி நாள் ஜூலை 7 ஆகும்.
- சனிக்கிழமை, ஆகஸ்டு 26 தேதிக்கான ஒரு கால இடைவெளிக்காக நேரில் வந்து முன்பதிவு செய்துகொள்ள கடைசி நாள் ஆகஸ்ட் 18 ஆகும்.
- சனிக்கிழமை, செப்டம்பர் 16 தேதிக்கான ஒரு கால இடைவெளிக்காக நேரில் வந்து முன்பதிவு செய்துகொள்ள கடைசி நாள் செப்டம்பர் 8 ஆகும்.

முன்பதிவின்போதே முழுக்கட்டணத்தையும் செலுத்தி பதிவு செய்துகொண்டாக வேண்டும். முன்பதிவின்போது செல்லத்தக்கதொரு திருமண உரிமத்தினைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது ($165) செலுத்தி திருமண உரிமம் வாங்கிக்கொள்ள வேண்டும். திருமண உரிமத்தினை நகர் மன்றத்தில் நேரில் வந்து (திங்கள் முதல் வெள்ளி வரை காலை8:30 துவங்கி மாலை 4:00 வரை) பெற்றுக்கொள்ளலாம்.

**திருமண உரிமங்கள்**

உங்கள் திருமணத்திற்காக திட்டமிடுகிறீர்களா? ஒன்ட்டாரியோ மாகாணத்தில் திருமணம் புரிந்துகொள்வதற்கு முன்பாகவே திருமண உரிமம் ஒன்றை பெற்றாக வேண்டும். பிராம்ப்டன் நகர

நிர்வாகத்தினரிடமிருந்து திருமண உரிமம் பெறுவதற்கான தேவைப்பாடுகள் மற்றும் கால அவகாசங்கள் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

-30-

**ஊடக தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca